அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 29/2017

எனது இல. EST-6/OFTIM/07/3050
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.11.28

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள்

**காவலாளிகளின் கடமை நேரம்**

மேற்படி தலைப்பில் வெளியிடப்பட்ட 309/1/66*(ஈடீ/சீஏ)*235 ஆம் இலக்கமுடைய 1949.08.24 ஆந் திகதிய மற்றும் 309/1/66*(ஈடீ/சீஏ)*303 ஆம் இலக்கமுடைய 1949.12.22 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கைகள் தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையானது இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், காவலாளிகளின் கடமை நேரம் சம்பந்தமாக 2017.12.01 ஆந் திகதியில் இருந்து பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

I. காவலாளிகள் வாரத்திற்கு 06 நாட்கள் சேவயாற்றுவதற்கு கட்டுப்படுவதுடன், ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களும் சாதாரண வேலை நாளாக கருதப்படல் வேண்டும். அவர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வு உரித்துடையது.

II. ஒரு சேவை சுழற்சிக்கான கடமை நேரம் 09 மணித்தியாலமாக அமைதல் வேண்டும். அத்துடன் திணைக்கள தலைவரினால், தனது தற்றுணிவின் பேரில் 12 மணித்தியாலய அதியுட்ச கடமை நேரத்தின் கீழ், ஒரு சுழற்சி கடமை நேரத்தை விதிக்க முடியும்.

III. ஒரு சேவை சுழற்சிக்கான கடமை நேரத்தினுள், 09 மணித்தியாலத்திற்கு மேலதிகமாக மேற் கொள்ளப்படும் சேவைக்காக மாத்திரமே மேலதிக நேர படியைப் பெற்றுக் கொள்வதற்கான உரித்தினை வழங்க முடியும்.

IV. 12 மணித்தியாலத்தை விஞ்சிய வகையில் காவலாளிகளை சேவையில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமுகமாக, அச் சேவையில் ஈடுபடுவதற்கு கருதுகின்ற கனிஷ்ட அலுவலர்களை அது தொடர்பாக ஈடுபடுத்துவதற்கு திணைக்களத் தலைவரினால் நடவடிக்கை எடுக்க முடியும். அத்துடன் அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில் நிரந்தர பதவியின் கடமை நேரத்தை அடிப்படையாக கொண்டு மேலதிகநேரப் படியைச் செலுத்த முடியும்.

V. நாளொன்றுக்கு சமமான காலப்பகுதியைக் கொண்டதாக 03 சேவை சுழற்சி முறைகள் நடைமுறைப்படுத்தப்படும் வகையில், காவலாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்படும் பட்சத்தில், ஒரு சேவைச் சுழற்சி 08 மணித்தியாலங்களாக அமையும் வண்ணம் தாயரிக்கப்படுதல் வேண்டும்.

VI. சேவைச் சுழற்சி முறையின் கீழ் 08 மணித்தியால சேவைச் சுழற்சி விதிக்கப்படுகின்ற அலுவலர் ஒருவருக்குக் கூட, சேவைச் சுழற்சி நீடிக்கப்படும் சந்தர்ப்பங்களில், மேலதிகநேரம் தொடர்பான உரித்து வழங்கப்படுவது 09 மணித்தியாலய கடமை நேரத்தை தாண்டி நிறைவேற்றுகின்ற பணிகளுக்காக மாத்திரமேயாகும்.

VII. காவலாளிகளின் மேலதிகநேரம் தொடர்பான படியினை கணக்கிடும் போது தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 6:1 உப பிரிவின் ஏற்பாடுகளை ஏற்புடாதாக்கிக் கொள்ள வேண்டும்.

03. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு